MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.

VOLUME – III ISSUE - II

FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# தொல்காப்பியம் ஒரு திராவிட இலக்கியச் சித்தாந்தம்



**Prof.ThalinjanMurugaiya,**

**Dept.of South Asia, University of Sorbonne Paris cité, INALCO, France**
**M.A. B. ED (University of India) MS(finance) ; MS (Linguistique) University of Sorbonne, Paris**
**Vice President of France Tamil Sangam, France (Estt.1970)**

**தமிழக அரசின் மொழியியல் விருதாளர்**

DOI 10.5281/zenodo.18471076.

**Abstract :**

**If we consider Tolkappiyam, we will leave the questions of who wrote it, when, and how, to the conclusions of Tamil scholars. Here, we are examining how much Tolkappiyam's Porulathikaram (the section on meaning) helps in reading literary works in the present day.**

**Based on what is stated in Porulathikaram, the first and most important questions that arise in literary criticism are related to place and time. The Akathinai (inner themes) and Purathinai (outer themes) are divided into seven categories each. Appropriate seasons are indicated for each theme. The time references include the seasons of the year and the divisions of the day. The seven Akathinai and seven Purathinai are classified based on the geographical and natural features of South India. A specific primary subject matter is mentioned for each theme. Since the emotional landscape appropriate to the time and place is clearly visible in literary works, it becomes possible to connect the poetic background with the essence of the poem's content. The reciprocal relationship between nature and man is subtly expressed in literature through the reciprocal relationship between the background and the content.**

**Key Words : Tholkapiyam – Dravidian Literature – Ethics – Ideology**



http://Creativecommons.org//license/by/4.0/.

தொல்காப்பியத்தை எடுத்துக்கொண்டால் அது யாரால் எப்பொது ,எவ்வாறு எழுதப்பட்டது போன்றவற்றைத் தமிழ் பண்டிதர்களின் முடிவுக்கு விட்டுவிடுவோம். நாம் வாழும் இன்றைய காலத்தில் இலக்கியப் படைப்புகளைப் படிப்பதற்கு தொல்காப்பிய பொருளதிகாரம் எந்த அளவுக்கு உதவும் என்பதைத்தான் இங்கே ஆராய்ந்து பார்க்கிறோம்.

பொருளதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பவற்றை வைத்துப் பார்த்தால் , இலக்கியத் திறனாய்வில் முதலில் முக்கியமாக எழும் கேள்விகள் , இடம் காலம் சம்பந்தப்பட்டவையே அகத்திணைகளும் புறத்திணைகளும் ஏழு ஏழாகப் பிரிக்கப்பட்டிருகினறன. ஒவ்வொரு திணைக்கும் தனித் தனி பொருத்தமான பருவங்களும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கினறன. காலக் குறிப்பீட்டில் ஆண்டின் பாகங்களான ருதுக்கள் [பருவங்கள்] நாளின் பாகங்களான யாமங்களும் உட்படுத்தப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியப் புவியியல் இயற்கையை ஆதாரமாக்கித்தான் ஏழு அகத்திணைகளும் ஏழு புறத்திணைகளும் வகுக்கப்பட்டிருகின்றன. ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு உரிப்பொருள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கால தேச நிலைகளுக்குப் பொருத்தமான உணர்வு மண்டலத்தை இலக்கியப் படைப்புகளில் தெள்ளத் தெளிவாகப் பார்க்க முடிவதால் , கவிதைப் பகைப் புலனைக் கவிதையின் உள்ளடக்கச் சாரத்துடன் தொடர்பு படுத்துவது சாத்தியமாகிறது. இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள பரஸ்பர உறவு இலக்கியத்தில் பகைப்புலனும் உள்ளடக்கமுமாக உள்ள பரஸ்பர உறவு வழியாக நுட்பமாக குறிப்பிடப்படுகிறது.

பழைய திணைகளைப் புதிதாக விளக்கவும் புதிய திணைகளை இனம் காணவும் முயலும்போது , முதல், உரி, கருப் பொருள்களில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிவருகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்ககாலக் கவிதைகளின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு உருவாகிக் கொண்டு வந்த இலக்கியக் கோட்பாடுகளில் சமகால இலக்கியத்திறனாய்வுக்குத் தகுந்த நவீனபடுத்தல் நிகழவேண்டியுள்ளது.

இலக்கிய ரசனையை , படிப்பை சீரிய முறையில் மனப்பூர்வமாக எடுத்துக்கொள்ளும் நபர் ஒரு படைப்பை அணுகும்போது முதலில் கவனிக்க


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

வேண்டியவை என்னென்ன என்ற கேள்விக்குத் தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் தரும் பதில் மிக அடிப்படையானது.

முதல் பொருள், அதாவது முதன்மைத் தத்துவங்கள் என்றால் அவை கால தேச நிலைகள் என்பனவையாகும். கால நிலையையும் தேச நிலையையும் கணக்கில் எடுக்காமல் ஒரு படைப்பைப் பற்றிய ஆய்வை ஆரம்பிப்பது சாத்தியமில்லை என்றுதான் இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது.

கால நிலை எவை தொல்காப்பியத்தில் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள கால நிலைகள் இரண்டு. ஒன்று , மழைக் காலம், வேனிற் காலம் போன்ற பெரும்பொழுதுகள், பருவங்கள் இரண்டு, காலை, மாலை, இரவு, போன்ற சிறுபொழுதுகள். இத்தனை மட்டுமே பொருளதிகாரத்தில் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றனவென்றாலும் விசாலமான பொருளில் உள்ளக் காலக் கணிப்பைக்கூட இதில் உட்படுத்த வேண்டுமென்று தோன்றுகின்றது.குறிப்பாக, வரலாறு பண்பாடு முதலிய செல்நெறிகள் உட்படுகின்ற காலக்கட்டங்கள். காரணம் , கால நிலை என்பது வரலாற்று அம்சம் உட்படுகின்ற ஒரு கருத்தாக்கம். வருடமானம் ,தினமானம் ஆகிய கணக்குகளைப்போல் யுகமானமும் இதில் உட்படும் , உட்படவேண்டும் அல்லது உட்படுத்தப்பட வேண்டும். இந்த உள்ளுணர்வைத் தொல்காப்பிய வரிகளின் இடையே நாம் வாசிக்க முடிகிறது. சுற்றுப்புறச் சூழல் , சூழ்நிலை என்று சொல்லும்போது பகலும் இரவும் போல் , வெளிச்சமும் இருளும் போல் , கோடையும் மழையும் போல் சரித்திரக் காலக்கட்டங்களும் மாறிக்கொண்டிருக்கும். மனித வாழ்வின் சூழலின் முக்கியமான அம்சங்களாகும். இலக்கியப்படிப்பில் கால நிலையை ஒட்டிக்குறிப்பிடுகிற எல்லா அம்சங்களுக்கும் முக்கியத்துவம் உண்டு. வரையறை செய்யப்பட்ட பொருளில் பெரும்பொழுதுகளின் சிறப்புத் தன்மைகளும் மனித வாழ்வின் மீது அவை செலுத்துகிற சிறப்பும் தீவிர பரிசீலனைக்கு உகந்தவை. அதைப் போலவே எதன் கால நிலை என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டும். மிகவும் விரிவான பொருள் தேடலில் காலநிலையின் மூன்று அம்சங்களாவது உட்பட்டிருக்கும். ஒன்று, எழுதிய நபரின் காலம், எழுதிய காலம், இரண்டு, படைப்பில் விவரித்திருக்கிற சூசகமாக்கப்பட்டிருக்கும் காலம் ,


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

காலகட்டம், மூன்று, வாசகனின் நிகழ்காலம், வாசிக்கும் காலப்பிரமாணம். முன்பு எழுதப்பட்ட ஒரு படைப்பை இன்று வாசிக்கும்போது எழுதப்பட்ட காலத்தைப் போல் வாசிக்கின்ற காலத்தையும் கணக்கில் எடுக்க வேண்டும். அவற்றைப் போலவே முக்கியமானவை படைப்பினுள் விவரித்திருக்கும் காலக்கட்டம் , பெரும்பொழுதுகள், சிறுபொழுதுகள், ருதுக்கள், நாள் பிரிவுகள் ஆகியவை.

பொருளதிகாரத்தில் இவ்வாறு குறிப்பிடப்படும் முதல் பொருள் , கருப்பொருள்,உரிப்பொருள் இவற்றை ஒரு துவக்கமாய்ப் பார்க்கும்போது , முதல் பொருள் தான் அடிப்படை. அதில் குறிப்பிடப் படுகிற இடமும் காலமும் மேலே விவரித்திருக்குமாறு சமகாலப் படைப்புகளின் ரசனைக்கு உதவவேண்டும்.

இடத்தைக் குறிப்பிடுகிற திணைகள் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டவற்றுக்குள் [அகம் 7 புறம் 7 =14] அடங்கி நிற்கவேண்டும் என்பதில்லை .

தமிழிலும் ஏனைய இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலம் உட்பட்ட திராவிடமல்லாத பிற உலக மொழிகளிலும் வெளிவந்துள்ள படைப்புகளில் புதிய திணைகளைக் கண்டுபிடிக்கலாம். இதைத் திணைப் பெருக்கம் என்று அழைப்போம். மலையாளத்தில் கோவிலனின் ஹிமாலயம் , முகுந்தனின் டெல்ஹி , வங்க மொழியில் விபூதிபூஷணின் ஆரண்யக் , தமிழில் ஜோ டி குரூஸின் ஆழிசூழ் உலகு, நீல பத்மநாபனின் பள்ளிகொண்ட புரம் போன்ற நாவல்கள் எடுத்துக்காட்டாகும். இந்த படைப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு,மேலே தொல்காப்பியம் விதித்திருக்கும் திணைகளிலிருந்து இவை பிறந்திருக்கின்றனவா, எங்கே ஒன்றுபடுகின்றன, பிறந்திருக்கிறது என்றால் திணைப்பெருக்கத்திற்கு வழி வகுக்குமா என்றெல்லாம் விரிவாக ஆய்வு செய்வது , திணைப்படிப்பைச் சமகால இலக்கியத்தின் நவீணப் பார்வைகளுக்குச் சாதகமாக்க வெகுவாகத் துணை புரியும்.

ஒன்றுக்கு அதிகமான திணைகள் ஒரு படைப்பில் இணங்கிச் சேர்ந்திருந்தால் திணையிணக்கம், திணை மயக்கம் என்று அழைக்கிறோம். இணங்காதிருந்தால் திணைப் பிணக்கம் [ஐரனி] , இவற்றை மேலே குறிப்பிட்டிருக்கும் இந்திய மொழி


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

படைப்புகளுக்கு மட்டுமல்ல, திராவிடம் அல்லாத பிறபடைப்புகளுக்கும் பொருத்திப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக ஷேக்ஸ்பியரின் மாக்பெத் நாடகம்.

மாக்பெத் நாடகம் ஒரு சரித்திர பின்னணியுள்ள அரசியல் கதையானதால் ஸ்காட்லாந்தின் அரசியல் வரலாற்றில் இதிகாச இயல்பான காலக்கட்டம் இங்கு சித்தரிக்கப்படுகிறது. நிகழ்ச்சிகள் நடப்பது , யுத்தத்தின் பின்னணியில் டங்கனின் கொலையும் ஆவியின் பிரவேசமும் எல்லாம் நடப்பது இரவில். மொத்தத்தில் மனிதனின் நல்ல தன்மைகளை நெருக்கிக் கொல்லும் குரூரத்தைத் தொனிக்கச் செய்யும் இருள்சூழ்ந்த நிசியின் சூழ்னிலை படைப்பு முழுவதும் நிறைந்து நிற்கிறது. பொருளதிகாரத்தின் அடிபடையில் பார்த்தால் மாக்பெத்தின் குணத்திலேயே இருக்கும் முரண்பாடு வெளிப்படுகிற அம்சங்களைப் பார்க்க முடியும். யுத்தக் காட்சிகள் , கோட்டை முற்றுகை ,எதிரிகள் அழிப்பு போன்றவை உடபடும் பகல்களில் கூட மாக்பெத்தின் மனப் போராட்டமும் வஞ்சனையும் பதவி மோகமும் சூசகமாகவும் இரவுகளும் சேர்ந்த ஒரு கால அளவு இங்கே வெளிப்படுகிறது. உள்ளடக்கம் அல்லது கதைக் கருவோடு தொடர்புபடுத்திதான் தொல்காப்பியத்தில் முதல் பொருள் ஆராயப்படுகிறது. ஒரு முழுநீள நாடகமாதலால் ஒன்றுக்கு மேற்பட்ட பெரும்பொழுது ,சிறுபொழுதுகளை இப்படைப்பில் காணலாம். அக உணர்வுகளை வெளிப்படுத்த இரவும் சமூக காட்சிகளுக்கு பகலும் , அதைபோலவே, ஒன்றுக்கு அதிகமான பெரும்பொழுதுகளுக்கு இடமுள்ள முறையில்தான் நாடகத்தின் உணர்வுச் சித்தரிப்பு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாகக் குறிப்பிட்டால் , முரண்பாடுகள் கொண்ட இருள்மூட்டமான சூழ்நிலை மாக்பெத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. சுருக்கமாக, அதன் கால ஆய்வாக இவைகள் யாவையும் குறிப்பிடலாம்.

பிரதேச நிலை என்று சொல்லும்போது படைப்பின் சம்பவங்கள் நடக்கின்ற இடம்,படைப்பு,உருவாக்கப்பட்ட இடம், படைப்பை வாசித்துப் புரிந்து கொள்ளப்படும் பிராந்திய சூழ்நிலை இவையெல்லாம் முக்கியமாக வரும் மாக்பெத்தின் புவியியல் பின்புலமான பிரதேசம் ஸ்காட்லாந்து. அங்குள்ள கோட்டை , கொத்தலங்கள், அரண்மனைகள், போர் நடக்கும் திறந்த வெளியிடமெல்லாம் இதில் உட்படும். தனிநபரான மாக்பெத்தின் மனப்போராட்டத்தைத் தொல்காப்பியத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

குறிப்பிடப்பட்டிருக்கும் அகத்திணையில் மருத்ததுடன் தொடர்பு படுத்தலாமெனினும் வெளியில் உள்ள மோதல் போர்க்காட்சிகள் , புறத்திணையில் உழிஞ்சையோடு தொடர்புப் படுத்துவதுதான் பொருத்தம். மாக்பெத்தின் உள்ளடக்கம் அக. புறத் திணைகளில் உட்பட மருதமும் உழிஞையும் சேர்ந்ததாகக் காணப்படுகிறது. டங்கனின் கொலையும் யுத்தக்காட்சிகளின் கொலையும் வேறுபட்ட உணர்வுகளின் லட்சனங்களைக் கொண்டிருப்பதால் இரட்டைத் திணையுள்ள படைப்புதான் மாக்பெத் என்று சொல்லலாம்.

இவ்வாறு பொருளதிகார முறையில் பார்க்கும்போது மாக்பெத்தின் உரிப் பொருள் நம்பிக்கைத் துரோகமும் பதவியைக் கைப்பற்றுதலுமாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பெரும்பொழுதுகளின் பின்னணியை இங்கே காணலாம். சூனியக்காரிகளின் மந்திர ஜபங்களுக்கும் விழாவுக்கும் பரிவாரமாக வருவது இடியும் மின்னலும் , இவை நிகழ்வது சதுப்பு நிலத்தில் , காட்சி இன்வேண்ட் கோட்டைக்கு மாறும்போது சூழ்நிலை தெளிவற்றதாகி விடுகிறது. « இது நல்ல இடம், இது மிருதுவான புலன்களுக்கு இன்பம் தருகிறது இங்குள்ள காற்றுகூட »என்றெல்லாம் கூறி அந்தியுறங்கும் டங்கன் அதிகம் தாமதியாமல் கொல்லப்படுகிறான். மாக்பெத்தின் மனத்தடுமாற்றத்திற்கும் இச்சையை அடக்கும் சக்தியின்றிச் செயலாற்றிக் கொண்டிருக்கும் பாவங்களுக்கும் தவிர்க்க முடியாமல் தலையில் வந்து விழும் பேராபத்துக்கும் ஏற்ற பகைப்புலனை ஷேக்ஸ்பியர் தயார்படுத்தியிருக்கிறார். இந்த நேரடி மறைமுக முரண்பாடு நாடகத்தில் மொத்தமாய் நிறைந்து நிற்கும் எதிரிடைப் பண்பாகவும் விதிவிபரீதமாகவும் நமக்கு அனுபவமாகிறது. இங்குதான் இரு திணைகளின் கூடிச்சேருதல் அல்லது கூடிச் சேராதிருத்தலை நாம் புரிந்து கொள்கிறோம். இந்த முரண்பாட்டை ஐரணியாகப் பல மேலநாட்டு அறிஞர்களும் சுட்டிக்காட்டுகிறார்கள். 'நிழலும் ஒளியும் இணைந்து சேர்ந்த வாழ்க்கை , மரணங்கள் பரஸ்பரமுள்ள முரண்பாட்டை எடுத்தாளுகிறது மாக்பெத்' என்று காலரிட்ஜ்சும் 'மூடுதிரையிட்ட சிந்தனைக் குழப்பமென்று' ராபர்ட் பிரிட்ஜஸூம் 'மாக்பெத்தின் ஐரணியென்று ' க்வில்லர் கவுச்சும். 'ஐரணி ஒரு செயல் உருவில் ' என்று மோல்டனும் விவரிப்பது இந்தத் திணைப் பிணக்கம் கொண்டுவருகிற சிறப்பியல்பாக நமக்குக் காணமுடியும். ஒரு திணையின் கருக்கள்


http://Creativecommons.org//license/by/4.0/.

இன்னொரு திணையில் வந்தால் அது திணைமயக்கம் , திணைகள் இணங்காமல் நின்றால் அது திணைப்பிணக்கம்.சூழ்நிலை , முரண்பாடு, உணர்ச்சி. இறுக்கம் , வெளிப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மாக்பெத் என்ற படைப்பின் பேராபத்து வெளியீட்டின் மொத்த அழகியல் சுற்றுபுறச் சூழநிலைச் சித்தரிப்புடன் தொடர்புடையது எனக் கூறலாம்.

முதல் பொருளையும் உரிபொருளையும் உணர்ந்து விட்டால் அவற்றில் வெளிபடுத்தப் பயன்பட்ட கருபொருள் கவனத்தில் படும் கால தேச நிலைகளுக்குத் தகுந்தவாறு பறவை ,விலங்கு,மரம்,இசைக் கருவி [பறை] ,பண்,மக்கள்,உணவு முதலியவற்றையும் தெய்வம் தொழில் போன்றவற்றையும் படைப்பில் காணமுடியும். தேவதையின் இடத்தில் இங்கே போர்த் தேவதையின் பிரதிநிதிகளென்று சொல்லத் தகுந்த சூனியக்காரிகள் முதல் காட்சியிலேயே தோன்றுகிறார்கள். கட்டுப்படுத்தும் சக்தியான நாடகாசிரியர் வெளிப்படுத்திருக்கிறார். அழிவின் விதையை அவர்கள் விதைக்கிறார்கள். அவர்களுக்குப் பொருத்தமான ஆவியின் வருகையும் , உழிஞைத் திணைக்குப் பொருத்தமான யுத்தமும் நாட்டின் ஆட்சியும் கதை மாந்தர்களின் முக்கியத் தொழில்களாக இருக்கின்றன. பறவைகளின் இடத்தில் அமைதி குணம் படைத்த மார்ட்டினுக்கு நேராக ஆந்தை இரவு முழுவதும் உரத்துக் குரல் எழுப்பியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மரத்தின் இடத்தில் பெர்னாம் மரக்கூட்டம் முழுவதும் உண்டு. இந்தக் கருக்களையெல்லாம் திறமையாக ஒன்றிணைத்துத்தான் பயங்கரமும் கொடூரமுமான ‘துன்பயியல்’ கதையை ஷேக்ஸ்பியர் நாடகமாக்கியிருக்கிறார்.

தொல்காப்பியத்தில் இலக்கியம் முழுவதும் அகம் ,புறம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. அகமென்றால் உட்புறம் சம்பந்தப்பட்டது , தனி நபர் சார்ந்தது, உளவியல்பாற்பட்டது,மென்மை உணர்வு , மோகனம், சுயசார்புடையது, என்றெல்லாம் கூறலாம். புறம் என்றால் வெளி , எல்லையற்றது, சமூகவியல் சம்பந்தப்பட்டது, தீவிர உணர்ச்சி வெளியீடு , பொருள் சார்ந்தது , என்றெல்லாம் குறிப்பிடலாம். ஒவ்வொன்றிற்கும் முறையே ஏழு திணைகள் பொருளதிகாரத்தில் விதிக்கப்பட்டிருகின்றன. இது ஒரு எடுத்துக்காட்டு [மாடல்] மட்டும்தான். இந்தக்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

கோட்பாட்டை மனித நிலைகளின் காலதேச நிலைகளுடன் தொடர்புபடுத்தும் அழகியல் கோட்பாட்டை , தேவையான விரிவாக்கல் , திருத்தல்களுடன் ஒரு படைப்பைத் திறணாய்வுச் செய்யப் பயன்படுத்தலாம்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் திராவிட இலக்கிய இயலின் ஆய்வுச் சித்தாந்த்தின் மூலக்கருவாகும். அதை விரிவாக்கி எடுத்தால் , ஒருவேளை உலகத்தின் மிகவும் பழமையான , மகத்தான ஒரு சுற்றுபுறச்சூழல் அழகியல் கோட்பாடு நமக்கு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. பூமியும் சொர்க்கமும் பாதளமும் பகைப்புலனாயிருக்கிற 'தாந்தேயின் டிவைன் ' காமெடிக்கும் 'மில்டனின் பாரடைஸ் லாஸ்ட்டுக்கும் ' இந்தக் கோட்பாடு பயன்பட வேண்டுமெனில் யந்திரத்தன்மையற்ற, கற்பனை எழில் வளம் கொழிக்கும் ரீதியில் இதை வளர்த்தெடுக்க வேண்டும். நீண்ட படைப்புகளில் , மேலே குறிப்பிட்டவாறு ஒன்றுக்கு மேற்பட்ட திணைகளைக் காணக்கூடும் , அகமும் புறமும் இணைந்து வரக்கூடும். உரிபொருள் கூட கலந்து வரலாம். கருப்பொருள்களைக் கால தேச வேறுபாடுகளுக்கேற்ற வாறு திருத்தி அமைக்க வேண்டிவரலாம்.இவ்வாறு அகமும் புறமும் இணையும்போது திணைப் பெருக்கம் என்று அழைக்கலாம். எடுத்துக்காட்டு, இராமயணத்தில் அயோத்தியும் காடும் , அபிஷேகமும் யுத்தமும் , வருவதை விரிவாக ஆய்வு செய்யலாம்.

இதைப் போன்று காலக்கோட்பாட்டை விரிவாக்கலாம். பெரும்பொழுது ,சிறு பொழுதுகளைப் போல் , காலக்கட்டமும் வரலாற்று நிகழ்ச்சிகளும் காலத்தால் சூசகமாகலாம். எடுத்துக்காட்டாக , சி.சு செல்லப்பாவின் சுதிந்திர தாகம் , கல்கி, பங்கிம்சந்திரர், சி.வி.ராமன் பிள்ளை முதலியவர்களின் நாவல்களை எடுத்துகொண்டு ஆய்வு செய்யலாம்.

« தான் கூறுவது எடுத்துக்காட்டுகள் மட்டுமே ,அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை » என்று தொல்காப்பியர் குறிப்பிட்டிருக்கிறார். எனவே , தொல்காப்பியரின் இலக்கிய தரிசனத்தைச் சமகாலத்திற்குத் தகுந்தாற்பொல் மேலே விவரித்தவாறெல்லாம் பின்பற்றினால் உலக இலக்கியப் படைப்புகளுக்குப் புதிய பரிமாணம் அளிக்க முடியும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

இப்போது மேனாட்டு மொழிகளில் ecopoetic என்று அழைக்கும் சுற்றுபுறச்சூழல் இலக்கிய சித்தாந்தம் உருவாகியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்க காலப் படைப்புகளுடன் பின்னிப் பிணைந்து விரிந்து பரந்துவந்த இந்தத் திணைக் கோட்பாட்டை , மாறின இன்றைய சூழ்நிலையில் ஏனைய மொழிப் படைப்புகளுக்கும் சமகால இந்திய இலக்கிய படைப்புகளுக்கும் பொருத்தி ஆய்வு செய்து பார்க்கலாம். வையத்தில் வேறெந்த மொழிகளிலும் இதைப் போன்ற ஒரு சுற்றுபுறச்சூழல் இலக்கியச் சித்தாந்தம் பழமை காலத்திலேயே வேர்விட்டு உருக் கொள்ளவில்லையாதலால் இந்தத் திராவிடத் திணைக் கோட்பாடு இவ்விழயத்திலும் நமக்குப் பயன்படுத்தத் தகுந்த ஓர் அரிய சித்தாந்தமாகும்.

**பயன்பட்ட நூல்கள் :**

1) **தொல்காப்பியர், தொல்காப்பியம் [இளையபெருமாள் , சுப்பிரமணியம் பிள்ளை] சரஸ்வதி நிவாஸ், திருவனந்தபுரம்.(1961)**
2) **விஸ்வநாதன் நாயர் பி. [அகநானூறு 2 பாகம்] கேரள சாத்திய அகடமி திருச்சூர்.(1981)**
3) **ஐயப்பப் பணிக்கர், திணைக்கோட்பாடு**
4) **நச்சினார்க்கினியார்,தொல்காப்பியம் பொருளதிகாரம் பகுதி 2, அண்ணாமலை பல்கலைக் கழகம்,(1986).**


http://Creativecommons.org//license/by/4.0/.